பூத்துநான்முகத்தோனுவிற்பொலிந்துளாள்போல்வார்பல்லோ
சோத்துசீர்ச்சென்னைக்கந்தனெங்கணுமுகமாறனே. (எ)

பாமலர்மாலைசூட்டிப்பரிசுநல்கென்னைக்கெஞ்சித்
தாமதநிகழுவாடித்தமியனேன்றளராநின்றேன்
காமருசென்னைமூதூர்க்கந்தவேள்கரத்தாலள்ளி
யேமமிக்குதவிடாமலெங்கணுமுகமாறனே. (ஏ)

அல்லலேர்குழலாராடலணிதிகழ்பொருனைத்தெண்ணீர்
நெல்லையூர்க்கேகுமாசைநிரம்பிநெட்டியிராநின்றேன்
சொல்லமிக்கணிந்தகந்தன்றுகளில்சீர்ச்சென்னையூரி
லில்லையென்றுரையாகுகியெங்கணுமுகமாறனே. (ஐ)

பொன்னேயேபொருளென்றெண்ணிப் புழுங்குறும்புலவரோபோ
சென்னையூர்க்கந்தன்றன்பாற்றினந்தினமிரவாநின்றேன் [ற்
றன்னைவந்தனைசெய்கின்றூர்தாழ்கின்றூர்தங்கள்கூட்டத்
தென்னையுமொருவனைக்கியெங்கணுமுகமாறனே. (ஒ)

வயல்வளம்பொலியுஞ்சென்னைமாநகர்க்கந்தவேள்பா
லயலவர்நடுங்கச்சீறுமாண்மைதந்தருளென்றேற்றேன்
கயல்வனக்கண்ணிதன்னைக்கடத்திணூடுதிக்கச்செய்த
வியல்வலிநல்கிடாமலெங்கணுமுகமாறனே. (ஓ)

மொய்த்துணர்க்கடம்பன்றன்பான்முதிர்புகழ்ச்சென்னையூரிற்
சத்துருமுழுதுமஞ்சுந்தடம்புயவலிமைகேட்டேன்
சித்துநாலிரண்டுஞானச்செல்வமுஞ்சேரச்செய்யா
தெய்த்துமாவறிவில்வேலோடெங்கணுமுகமாறனே. (ஔ)

முருகனைச்சென்னையூரின்முழங்கெழிற்பவனிதன்னி
லருகணைந்தென்னையின்னேயாளெனப்பணிந்தேனன்றேணன்
பொருவருமூவர்போற்றும்புகழிடையிறுமாந்தேயோ
விருவினைத்தளைகாய்யாமலெங்கணுமுகமாறனே. (ய)

மருமலிகுரவம்போலும்வண்டமிழாசையென்று
மொருவருஞ்சேந்தன்றன்னையுயர்புகழ்ச்சென்னையூரிற்
குருவெனவந்தவுண்மைகுலவுமாறருளென்றேற்றே
னிருளறவெனேயேபாராதெங்கணுமுகமாறனே. (யக)

செந்தமிழ்க்கிளியாமுன்னந்திகழ்ந்தவாறுணர்ந்துந்தீராச்
சிந்தனைக்கடலின்மூழ்குந்திருப்புகழ்ப்புலவனிங்காள்
கந்தனைச்சென்னையூரிற்கண்டவாகழறும்பாடல்
வந்தனைக்கினிதென்பார்தம்வாய்கலமகள்வீடாமே. (யஉ)

முற்றிற்று.

தெய்வமே துணை.

உ

முருகக்கடவுடுணை.

விமானதரிசனப்பதிகம்.

காப்பு.

துங்கவணிகர்குலச்சுப்பராயேந்திரன்செய்
தங்கவிமானந்தனிலிருந்தான்—செங்க
ணரிமருகன்வள்ளிகாண்கணுசில்லிசன்னைக்கந்தன்
சரியணிகைக்குஞ்சரிகாந்தன்.

அறுசீர்விருத்தங்கள்.

கிரியெலாமிருந்துமன்பர்கிலேசமுற்றிழுக்கவேண்டித்
திரிவிதவுலகும்போற்றுஞ்சென்னையிற்சேர்ந்தகந்தன்
பரிதிசேர்மகுடஞ்சூடிப்பன்னிமாரிருவசோதும்
விரிகதிர்ப்பொன்விமானமிசையெழுந்தருளினானே. (க)

மத்தராய்வழக்குப்பேசும்வணிகராயெல்லாம்வல்ல
சித்தராமவர்கண்பெற்றசேயெழிற்சென்னையூரிற்
பத்தர்தந்துயரந்தீர்த்துப்பாவலர்க்கருளவேண்டி
மெய்த்தவர்மனமேபோலும்விமானமீதிருந்தானன்றே. (உ)

சளங்கெடுத்தறங்களெல்லாந்தழைவுறவளர்க்குந்தாயை
வளங்கொள்வேற்படையாச்செய்துவலக்கையிற்றரிக்கவல்லான்
குளங்கனைச்சங்கின்மின்னுர்குடமருள்சென்னையூரில்
விளங்கெழில்விமானமீதுவீற்றிருந்தருளினனே. (ஙு)

வண்டமைக்கறுவிநல்லோர்மகிழ்வுறச்செய்யவென்றூ
தண்டமிழ்ப்புலவர்வேண்டுந்தகையெலாம்வழங்கவென்றூ
தொண்டர்தம்பணிமேற்கொள்வார்துலங்கெழிற்சென்னையூரில்
வெண்டலைக்கையார்தஞ்சேய்விமானமீதிருந்தவாறே. (ச)

ஆட்டுவாகனமும்வெள்ளையானையுமயிலுமேறி
மாட்டுமொவ்வொருக்காலீன்றூர்மத்தியில்வயங்குஞ்செவ்வேள்
பாட்டுடைப்புலவர்பல்லோர்பரவுசீர்ச்சென்னையூரில்
வேட்டுளாரிருவரோடும்விமானமேல்விளங்கினனே. (ஙி)

காரணமெனவந்தன்றூர்கனவினிற்கழறுங்கள்வன்
பாரணங்குவகையெய்தப்பண்ணவர்மலர்கடூற்ற
நாரணன்முதலோர்போற்றவளிர்பொழிற்சென்னையூரில்
வீரவேற்படையொன்றேந்திவிமானமேன்மிளிர்கின்றூனே. (சு)

சேற்படுங்கழனிசூழுஞ்சென்னையிற்செழுஞ்சொற்கொண்டு
நாற்பயன்களையும்விற்கைநண்ணியோருமலியாடக்
காற்பலச்சேவல்கூவக்கைக்கிளிகவிதைபாட
வேற்படைச்செட்டியின்றூர்விமானமேன்மேவினனே. (எ)

சாதியுஞ்சமயக்கூறுந்தள்ளியசழக்கர்தம்பால்
வாதிடாநண்ணித்தாமேமதுரையில்வழுதிகண்முன்
றீதிலேடதனைத்தீயிற்செலத்திலிட்டெடுத்தசெங்கை
வேதியச்சிறுவன்சென்னைவிமானமேன்மேயவாறே. (அ)

தண்ணிலாமவுலிப்பெம்மான்றழல்விழிதருமென்றங்கை
பெண்ணினல்லவர்வாழ்சென்னைப்பெரியபொற்கோயிலூடு
திண்ணியசூரனைத்தீயைச்செகுத்தபின்னர்
விண்ணிலன்றிருந்தாற்போலவிமானமீதிருந்தானின்றே. (கூ)

இன்றமிழ்க்கவிப்பேராசையெனுங்கடற்குளிக்குமெந்தை
பொன்றலில்சிவனுமாலும்போதனும்புனையுந்தாளான்
குன்றரும்வளந்தாய்சென்னைக்கோயிலிற்குளிர்விமானத்
தின்றயில்குலிசஞ்சூலமேந்திவீற்றிருந்தானன்றே. (ய)

வேதனைப்புடைத்தசெங்கைவிமலதேசிகன்விண்ணீத்த
மாதரார்கவரியோச்சவணங்குவார்துதிப்பார்சூழப்
போதவைங்கருவியார்ப்பப்புகழ்ச்சென்னைபுரியிற்பொன்செய்
கோதறும்விமானமீதுகொலுவில்வீற்றிருக்கின்றனே. (யக)

ஆரியர்புலவர்தொண்டரருந்தவர்க்கினியசெய்யுஞ்
சீரியனமரம்பேட்டேர்ச்செட்டியாஞ்சுப்பராயன்
வாரிதிச்சென்னைக்கந்தன்வைகுபொன்விமானங்கண்டு
பாரினிற்றண்டபாணிபதிகத்திலுறப்பெற்றனே. (யஉ)

முற்றிற்று.

தெய்வமே துணை.

ஸ்ரீமன்நராயணயநம.

கடன்சீட்டனுப்பியபதிகம்.

காப்பு.

கெழுமாண்புநீடுமெல்லிக்கேணித்திருமா
லெழுநூறுபொன்கடன்சீட்டீந்தான்—றெழுவார்கேட்
டிந்தவுலகிற்களிப்பவேத்துமெனக்கேற்றதுணை
கந்தமதத்தாழ்வான்கழல்.

எண்சீர்விருத்தங்கள்.

மனிதர்களிலொருவனெழிற்றேர்நடத்துவோனு
வடிவெடுத்துச்செந்தமிழும்வண்டுளவும்புனைந்து
பனிமலர்க்கொம்பனையதிருமடந்தையொடுகூடிப்
பழுதிலல்லிக்கேணியில்வாழ்பச்சைநெடுமாலே
துனிபடுவேற்கேன்றமட்டிற்பரிசுநல்கிடாமற்
றெண்டர்களிலொருவனெடுசொல்வதுஞ்செய்யாம
னியவெழுகூற்றிருக்கைவாங்கியதற்கீடா
வெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (க)

முன்னையுலகத்தனையும்படைத்தானையுந்தி
முளரியிணற்பெறும்பெருமைமுன்னிமகிழாமற்
றென்னைவனஞ்சிறியுமல்லிக்கேணியிலோர்பேடி
தேர்நடத்துவோனெனும்பேர்செப்பிநிற்கநாணீர்
மின்னைநிகரிடைத்திருமின்மார்பிலிருக்கின்றுள்
வீடுதொறும்போயிரந்துமெலிவடையாவண்ண
மென்னையவள்கண்ணிணைருக்காற்பார்த்திடச்சுட்டாம
லெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (உ)

வாகைமலிதானவர்தங்குலத்தினுக்கோர்கூற்றுய்
வானவர்க்கின்னமுதளிக்குமாதாவாயிருந்து
மோகைமலிந்தொருவனதுசாரதிப்பேர்சூடி
யுயர்ந்தவல்லிக்கேணியிடையுறையுநெடியோனே
பாகைநிகர்தமிழ்ப்பனுவல்பலபாடிச்சூட்டிப்
பரிசுபெறற்கெதிர்நோக்கிப்பரதவிக்கின்றேனுக்
கீகையுண்டேலிப்பொழுதேயீந்துநெல்லைக்கனுப்பா
தெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (ஊ)

தொட்டுமுன்னுளொருவனணிகலையுரியவாடித்
தொழுமவட்கக்கணத்திலருள்சுரந்தவிதம்பாடிக்
கிட்டுமெனையறியீர்கொல்கிளர்பெருஞ்சீரல்லிக்
கேணியுடையீர்கொடியோர்க்கெடுப்பதற்குச்சோம்பீர்
கட்டுவர்க்கமாபரணம்பொன்னெல்வலிமுதலாக்
கழறவல்லார்கழறுகின்றகவின்பலவுங்காட்டு
மெட்டுவகைச்செல்வமுநும்மனவிகைக்குளிருந்து
மெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (எ)

கந்தனரன்கவுரிமுதற்றேவர்களுக்கெல்லாங்
கவிபாடியீகைநலங்காணுமற்றிருமின்
சொந்தமுமக்கென்பதெண்ணித்துதித்தவெனக்கின்னே
சுகங்கொடுக்குந்திறமையின்றுசூதுசெய்கின்றீரோ
வந்தணல்லிக்கேணிநகராளுநெடுமாலே
யருக்கனிகராழியொன்றுமணுவுமறுவில்லா
விந்தனையசங்கமொன்றுமேந்தியகையெழுத்திட்
டெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (ஏ)

அவலொருசற்றளித்தான்வீட்டெட்டுவிதச்சீரு
மமைதரமுன்செய்தவித்தையயத்துவிட்டதேயோ
தவளமருமகளறியப்பாடெனநீர்கேட்ட
தருணத்தினம்பாமற்றடைசெய்தென்கொல்லோ
புவனமுற்றுமுண்டுமிழ்ந்தவாய்மொழிபோதாதோ
பொருவிலல்லிக்கேணியிலவாழ்புனிதநெடுமாலே
யிவளவுபேர்சாட்சியெனவெழுதவுஞ்செய்தந்தோ
வெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (சூ)

கணைநிகர்கட்பொதுவமின்னுர்வீடுதொறுந்திருடிக்
கட்டுண்டகள்வனெனக்கழறுநர்க்குமிரங்கிப்
புணையெனப்போய்ப்பிறப்பாழிகடத்தவல்லநும்வாய்
புகன்றபடிநடத்தாமற்பொய்க்குமென்றெண்ணுவனே
திணையிலுயர்நெய்தலல்லிக்கேணிநெடுமாலே
செம்பொனதெபெரும்பேரூச்சிந்தைசெய்கின்றேனே
வினையடிதந்தாலலதுமகிழ்ச்சியுறுவெனக்கிங்
கெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (எ)

பன்னிறைவாய்க்காரிடங்கர்பற்றியதாளுந்து
பரதவித்துக்கூவியதோர்பாழிமதவேழம்
தன்னிடம்போய்ப்புரந்தவருளின்றுபிழைத்ததுவோ
தமியேனென்பசுவதையித்தரணியிற்றீர்தரன்மிக்
குன்னிடுதலறியீரோவுமக்கிதுகைப்பாமோ
வுலப்பிலல்லிக்கேணியிடத்தொளிருநெடுமாலே
யென்னிடநீருவணமிசையேறிவந்திடாம
லெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (அ)

மூரணியநெஞ்சினர்சிலர்போன்றுமைப்பலவற்றின்று
மூன்னுகின்றேனென்கொல்லோநீர்முழுமுதலன்றையோ
சரணிரண்டால்விண்ணுமண்ணுமளந்தமைசொற்றிலதே
தறையுவக்குமாறுசெய்யத்தக்கதிறன்றருவீ
ரரணிலங்குந்திருவல்லிக்கேணிநெடுமாலே
யனைத்தினுநீர்வசிப்பதுண்டென்றறைந்தமைந்தனுவப்பா
னிரணியன்முற்சீட்டனுப்பாதினையீரொற்கிங்கா
னெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (கூ)

பத்துமுதுபுலவருடனெருவனெனவென்னைப்
படியும்விண்ணும்போற்றிசைக்கப்பண்ணவல்லீரன்மே
கத்துதிரைத்தடங்கடல்விட்டெழுந்தல்லிக்கேணிக்
கனகமதிட்கோயிலிடைகாட்சிதந்துநின்றீர்
சித்துவிளையாடியப்பாற்றிரும்பரிதாம்வீட்டிற்
சேர்வதெண்ணும்விதமறிந்துந்தெரியார்போன்றிங்கா
ளித்துதிவேட்டோவில்லாநிமித்தத்தோவடியேற்
கெழுநூறுபொன்கடன்சீட்டேனனுப்பினீரோ. (ய)

முல்லைநிலத்தெய்வமெனப்பிரித்துரைக்கும்புலவோர்
முகநாணச்சங்கும்வண்டுமுழங்குமல்லிக்கேணி
யெல்லைநெய்தற்பதிபுரக்கும்பார்த்தசாரதியா
ரெழுநூறுபொன்கடன்சீட்டினிதனுப்புங்கனவா
னெல்லைநகர்த்திருப்புகழோன்றுதிக்குமிந்தப்பதிக
நிதமுரைக்கச்சலியாதநெறியுடையார்க்கெல்லாம்
வல்லைமிடிக்கனலவித்திட்டானந்தபோகம்
வருவிக்குஞ்சத்தியமுமனமுமறிந்ததுவே. (யக)

முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

தெய்வமே துவண.

உ

ஸ்ரீமன்நாராயணாயநம.

கட்டுவேனென்றபதிகம்.

காப்பு.

புள்வகிர்ந்தசெந்தேடோட்புருடோத்தமனெனும்பேர்க்
கள்வனையென்னுரக்கயிற்றாற்கட்டும்விதம்—விள்வதற்குச்
சேனையர்கோன்றாளிருக்குருகையாளவந்த
சோனைமுகிலொன்றுந்துணை.

எண்சீர்விருத்தங்கள்.

பாண்டவரிலிளையவன்முன்கட்டநொந்து
பட்டபாடயத்தனையோபத்தல்லா
மீண்டளவில்வருத்தமுற்றுர்பசுவுன்றின்னு
மீனர்மிகமகிழ்கின்றுமொழுந்திராம
னீண்டமுகில்போற்கிடந்துதுயில்வார்போலெ
நெடுமூச்சுக்காட்டுகின்றுய்நீதியல்லக்
காண்டவனமெரித்தவன்றேர்நடத்தற்கொல்காக்
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே. (க)

அனவரதமெட்டெழுத்தேதுவல்கின்றுரு
மதன்முதல்சேர்மந்திரங்களறைவார்தாமும்
பனகமதன்வாய்ப்படுமென்றெனைபோலப்
பரதவிக்கின்றுர்களந்தோபாராரார்போனீ
மனமிரங்காவீனர்களுக்கரசுநல்கி
வாழ்கின்றுயிதுகொடியவம்பாமாலென்
கனவில்வந்தபடிநனவிற்றுன்றிடாத
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே. (உ)

மவுனசுகாதீதநிலைப்பொருணீயென்ன
மறையுடனுகமங்கள்பலவகுத்திட்டாலுஞ்
சவுனகராதியர்வினவச்சூதர்சொன்ன
சரித்திரங்களத்தனையுந்தவிருங்கொல்லோ
பவுரணச்சந்திரனனையமுகத்தாளோடும்
பறவையரசேற்றிவந்தாள்பரிந்தாளாயேற்
கவுரவர்தங்குலமழியத்தூதுசென்ற
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே (ங)

எஞ்சலில்பல்லுயிர்களையும்புரப்பதான்றே
யெனதுதாழிலீனர்குலமிகத்திலிங்நாண்
மிஞ்சலுற்றவாறுசொல்லேலெனச்சொல்வாயேல்
விடமாட்டேன்கடல்கடந்துவெம்போர்செய்து
துஞ்சவிராவணற்செகுத்ததன்றித்தாய்முற்
றுன்றினனென்றிரங்காமற்றுட்டனை
கஞ்சனுரம்பினப்புறவேலெறிந்துங்கொன்ற
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே. (ச)

விண்ணுமண்ணுந்திருவடியாலளந்தனுாயம்
விளங்காதநெஞ்சினர்போல்வேரூர்தெய்வ
மண்ணுலகினிடத்துமுண்டென்றுழலமாட்டேன்
வண்டமிழாலிரந்தபயன்வழங்கவேண்டும்
பெண்ணுடனணுகியுந்திமலராலங்காள்
பெற்றமகனுைாத்தமறையிழையாவண்ணங்
கண்ணுதலாணுதியபல்வடிவுங்காட்டுங்
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே. (ரு)

மூந்தவெனையாண்டுகொண்டவுண்மைதோன்ற
முன்னியபேறனைத்துநல்கிமுலைக்கொம்பன்னர்
தந்தவொளிக்குருகுமயன்முழுதுநீக்கிச்
சரணமலரிடைபுகுஞ்சீர்தந்தானன்று
மிந்தவிதஞ்செய்யாயேல்விடுவேன்கொல்லோ
வெட்டெழுத்துஞ்சோம்பாமலியம்பியேத்திக்
கந்தமலர்தூவுமவர்க்கடிமைசெய்யுங்
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே. (சு)

நல்விரசைக்கப்புறநீவசிப்பதாக
நவிலவல்லார்நவின்றுலுநாயேனந்தச்
சொல்விழையேனெங்கணுநின்னிடமாமென்றே
சூழ்கின்றேன்பார்த்தன்முன்னீசொலுஞ்சொற்பொய்யோ
புல்விரும்புமானினங்கண்மகிழப்பொல்லாப்
புரந்தரனும்வருணனும்பைம்புனலுநாணக்
கல்விருத்தக்குடையாமென்றெடுத்துக்காத்த
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே. (எ)

திக்கனைத்துங்கொலைபுலைதீர்ந்துய்யவேண்டித்
தெண்டனிடுந்தமியேனைச்சிறுதன்னன்மா
மெய்க்கதிபெற்றுய்வதான்றேவிழைவார்தாமு
மிகவிகழவிட்டுவிடேல்விட்டானீங்கே
னெக்கணத்துமெவ்விடத்துமிருக்குமெந்தா
யிரும்புனத்துவாவியிடையினைத்துக்கூவுங்
கைக்கரிமுன்னருஞ்சேலென்றுருக்காற்சென்ற
கள்வவுன்னைநார்க்கயிற்றுற்கட்டுவேனே. (அ)

ஒருகனவிலடியவர்தம்வடிவாத்தோன்றி.
யுடனுழிவளையேந்துமுருவங்காட்டிக்
குருபரனுநின்றவுண்மைபொய்யாதென்றே
குறிக்குமெனைத்தளராவிடேல்குழவியொன்று
வருகெனுமுற்றாணில்வந்தாடகனைச்செற்றாய்
வானிடைபுள்ளரசிலன்றுவந்தும்போனாய்
கருமமதவாதிகளாலறியவொண்ணாக்
கள்வவுன்னைநார்க்கயிற்றாற்கட்டுவேனே. (கூ)

நீயிவண்வந்துதிக்கினன்றித்தீரமாட்டா
தெறிப்பிழைமிக்கடார்ந்ததனனெடுநீர்ப்பூமித்
தாயிரங்கல்சகிக்கறியேன்விரும்புமாறு
தயைபுரியவேண்டுமன்றுசலசத்தம்மை
வாயிசைத்தபடியெழுந்துவாராயாகில்
வண்டமிழ்ப்பாப்பதின்மருள்ளமகிழுவின்னே
காயிகத்தோர்சிலையுமுன் ணண்டுகொண்ட
கள்வவுன்னைநார்க்கயிற்றாற்கட்டுவேனே. (ஙு)

காரணனெவ்வுயிருமீபயந்துகாத்துக்
கழிப்பானச்சங்காழிகதைவில்வாட்கை
நாரணனவந்தருளவேண்டுமின்றே
னுர்க்கயிற்றாற்கட்டிடுவேனெனன்றன்னோன்
பூரணனென்றறிதுணிவானெல்லையூரான்
புகன்றகவியிவைபத்தும்புகல்கைக்கஞ்சார்
பாரணங்கின்முதற்புதல்வராவாரிந்தப்
பரமார்த்தம்பாரதிப்பெண்பகர்ந்தாலுண்டே. (ஙக)

முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

தெய்வமே துணை.

சிவமயம்.

கொடுமுடிக்
கும்பாபிஷேகச்சிறப்புக்கும்மி.

சீருல வுந்திருப் பாண்டிக் கொடுமுடிச
செம்மறன் கும்பாபி டேகஞ்சொல்லச்
சிரமானது மதயானையி னுருவாயம ரொருசோதிதன்
சேவடி சென்னியிற் சேர்ப்பாமே. (க)

கொங்கு விரிந்த மலரமர் மாமகள்
கொண்கன் மறையவன் கூடிநின்றே
குலவும்மிரு தங்கத்தொடு கஞ்சங்கொள விதமாநடங்
கொண்டிடுங் கொற்றவன் ரூள்சரணம். (உ)

நாத னியற்றுமா னந்த நடனத்தை
நாமெலா மெப்போது மேகண்டு
நலமேவிய புலமேவிட வுலவாதுமுன் செலநாடிய
நங்கை சிவகாமி நாயகியே. (ங)

செங்கையின் மான்மழு கங்கை சிரங்கொளுந்
துங்க மகுடா சலவரதீ
துணிவோடுனே யணைவார்பவப் பிணியோடிட வெணியேயுறை
தூயவ னேயரு டானருள்வாய். (ச)

எம்பர மன்வலப் பாகத் தமர்ந்திடு
மேந்திழை யேயிக் கவிரம்ப
இடியோடுறை கடிமாமுகில் வெடிவாளேக ளடியாங்கொடு
முடிவடி வாம்பிகை முன்னுவையே. (ஞ)

கொடுமுடிக்கும்பாபிஷேகக் கும்மி.

அன்றுகல் லால விருக்கத்தடி நால்வர்க்
கசையாத மோனஞா னந்தெரித்த
வருண்மேவிய குருவேயுன தடிநாடொறு முடியேவனைந்
தன்பொடு மெண்ணுவ னுதரித்தே. (சு)

கயமுக னைக்காய வயமென வோங்கிய
கனகொம் பொடித்த கணபதிதாள்
கருதித்தின முருகிக்கசி வதனேடக மலர்மீதினிற்
கண்டு களித்து வணங்கிடுவாம். (எ)

தோகை மயின்மீதி லோகை கொளவிரு
தோகையர் சேர்வாகை வாகுடனே
துவரக்கதி ரிவர்பூதர முவரக்கட லவர்மெச்சிடத்
தோற்றிய தென்னப் பொலிந்திடுவோய். (அ)

ஏழைக் குடியரை வாட்டும் வலியவர்
ஈடறச் செய்யு மிளையவனை
மெழின்மூவிலை வடிவாகிய வேணங்கொளுஞ் சூலப்படை
யேந்திய கஞ்சுக னெந்துணையே. (கூ)

எண்ணு தருமகஞ் செய்த வெழிற்றக்க
னிறுதி பெறவெந்தை பாலுதித்த
இணையில்கர மீரைந்துநூ றேயும்படை யிகல்வானவன்
எம்மைப் புரப்ப னிரும்புவிக்கே. (ஙு)

ஆதி குருவாஞ் சீகண்ட னருள்பெற்
றடைந்திடு ஞானமிவ் வவனியுளார்
அருண்மேவிட முறையோதிய வண்ணற்றிரு நந்திக்குரு
வடியென்று மெம்முடி யிற்றரிப்பாம். (கக)

கம்பத் துடையானைக் காய வுதித்தநற்
கம்பத்தத் தானே கறைசையில்வாழ்
கனமாமணி முடிசூடிய காரேயென வீரேடமர்
காகுத்த னேயெமைக் காப்பாயே. (கஉ)

செந்தா மரைமீதோ ரந்தா மரைசனஞ்
சேர்ந்தென வேபொலி யிந்திரையே
சினமுற்றிய வறுமைப்பிணி சேராதெமைச் செல்வந்தரச்
சீக்கிர மேயருள் வீர்தினமே. (கங)

சிறுவர் பிழைபல செய்திடி னும்பொறை
சேர விருந்திடுந் தாயெனவே
சினமுற்றிய மனமேயுடைச் சிறியேம்பிழை யறியாதுறை
தெய்வப்பூ தேவியின் ரூள்போற்றி. (கச)

மான்மக னென்னவந் நாண்மல ருந்தியி
ளன்முக ஜோடிமு னண்ணிடுவோய்
மலமிக்கவி மாயப்பவ மாகப்பிணி யோலைப்பட
மண்ணில் விடேலினி வாழ்த்துவனே. (கஞ)

மறைபயி லந்தண னறைநா விருந்திடு
மடமகள் போற்றுவா ரிடமுறையும்
திடமேவிய கலைநாயகி வடமாமொழி யடல்கொண்டிடத்
தயைசெய்கு வாயுன தாள்சரணம். (கசு)

மயிலேயி லன்றொரு குயின்மொழி யின்னெஞ்
பயில்விழி யாக்கிய கோபரனே
மலைநேரணு வெனவேனுமுன் கலையேதர வருவாயருட்
காழிப் பதியுற்ற கவுணியனே. (கஎ)

சாக்கியர் தம்மொழி யேற்றவ ராய்ப்பின்
றணந்தருட் சூலையாற் றண்கடலிற்
சனமேவிய படகின்முனர்த் திடமேவிய சிலைமேல்வருந்
தெய்வத நாதன் றனைத்துதிப்பாம். (கஅ)

தொன்மறை யந்தணன் ரூன்றலை வென்றித்
துறைகொ டடக்கரை தன்னிலந்நாட்
டுதிமேவிய வவிநாசியி லெதிராகவே முதலைவிடச்
சொல்லிய நம்பி துணையாமே. (கக)

சாங்கைய ராகிய சாக்கியர் வாதிற்
சயங்கொண்ட தன்றிநற் சங்கையறச்
சனனக்குறை பெறுழுங்கையை வினவிப்பணி விடைசொல்லிடச்
சாற்றிய வாசகன் ரூள்போற்றி. (உ0)

நீர்கொண்ட வேணி நிமல னருள்பெற்ற
நித்திய சுத்தமெய்ப் பூரணரா
நிகரற்றிரு பணிமுற்றிய தொகைமிக்கவர் தகையுற்றவர்
நீடு மடியவர் பதம்போற்றி. (உக)

கொடுமுடிக்கும்பாபிஷேகக் கும்மி.

தாதையைத் தாளறத் தாக்கி யநீதி
தணந்திடச் செய்து தயாபரனுற்
றுமொப்பில ரெனவோதிடு தகைமைக்குண மருவுந்திருத்
தண்ணருள் பெற்றசண் டேசுரனே. (உஉ)

பெற்ற விநதை பெருந்துயர் மாற்றிடப்
பெட்புட னேபிஞ்ஞ கற்போற்றிப்
பேராதம ராராவமு தேராவுறக் கலுழன்பதம்
பேணிப் பணிந்து பிறப்பறுப்பாம். (உங)

சீதர னென சிறப்புடை ராமனைச்
சீதை பெறச்செருச் செய்தவனே
சினமோடெமை மனநொந்திடச் செயுநீதியில் சிதடர்தமைச்
சேரத் தொலைத்துச்செய் வாய்நலமே. (உச)

தாழ்வார்க் கருள்செயுந் தாமோ தரற்பணி
யாழ்வா ரெனும்பதி னெண்மர்களேத்
தனமேயென வழுவாதக மலர்மீதினிற் றரல்செய்தவர்
தாள்பணிந் தேத்துவந் தாரணிக்கே. (உரு)

மகிடா சுரனெனு மாவலி யாளன்முன்
மாளச் செருச்செய்த மாண்புடையாள்
மாலுக்கிளை யாளந்தரி மகவைப்பெறு வரமேதரு
மலைமங்கை யைத்தினம் வாழ்த்துவமே. (உசு)

அன்னவள் பாத மடைந்தருச் சித்திவ்
வகில முழுது மெடுத்தறைய
வலகில்வட கலைநூல்பல வன்போடுரை தாசன்னடி
யனுதின மேத்தி யகங்களிப்பாம். (உஎ)

வளம்பட வாம்பரி மீதில் வலசாரி
வருமொரு வீரக் கறுப்பணனே
வலநீதியின் வரைமிஞ்சிய கலவரல மரவேவசெயும்
வாகுடை யோயுனை வாழ்த்துவமே. (உஅ)

பிள்ளைக் குறும்பினி தீர்த்து நலஞ்செயும்
பேய்ச்சி யெனும்பெய ரம்மையுன
பேர்கள்சொலி யாடித்தின மேவும்பல வாநல்லிசை
பெட்புடன் கொள்ள வருளுவையே. (உக)

சோலையி லோடித் திரிந்து மலர்கொய்யுஞ்
சுந்தரக் கன்னிய ரெழுவர்பதஞ்
சூடிச்சிர மீதிற்றுதி சொல்லித்தின மாடிப்பெருஞ்
சொன்னம் பெறுகுவஞ் சோர்விலமே. (கo)

அகத்தியந் தொல்காப் பியநன் னூலோதி
யகத்துள் ளமைத்த புலவர்முன்ன
லறிவேதுமில் சிறியேன்சில வறைவேனென லடியேன்றனக்
காச்சரி யம்மென் னவர்க்காமே. (கக)

சொல்லும் பொருள்சிறப் பென்னில் வழுவையுஞ்
சொல்லுவர் பேணி யமைதியெனச்
சுலவுஞ்சழ லுமையற்புத சுகுணன்புக ழுளதாதலிற்
சொல்லார் குறையினைச் சொல்லுணர்ந்தோர். (கஉ)

சிறியேன் பிதற்றிடுஞ் சீரின் றிறத்தாலாஞ்
செம்மை குருசந் தனன்றனக்காம்
திகழுங்கலின் முழைநற்கரி சேரத்திரிந் தேயெய்த்திடச்
செய்யு மெதிரொலிச் சீயம்போல. (கங)

ஆடியிற் காணு மெதிர்வடி வேபிறழ்ந்
தாகிட லாடியின் குற்றம்போ
லகிலத்தினி லவஞ்ஞெதிய வவைதப்பிட வுணர்விற்கொளு
மடிமை பிழையவற் காகாவே. (கச)

பெரும்பிழை சேரப் பிதற்றிய தாயினும்
பிஞ்ஞுகன் றன்பெரு மையுளதாற்
பிரியப்பெரு நீரிற்செறி பீரைப்பெறு மாபுள்ளெனப்
பீடுறக் கொள்வர் பெரியோரே. (கஙு)

ஆதி கமட மளவி லுகம்பெற
வண்மித்தான் போற்று மகட்குதித்த
அருங்கித்தில மெனவேயொளிர் மகளைப்பெற வெணியோயிவண்
ஆகும் புறவடி யானதுவே. (கசு)

சோகஞ் செயுமத னம்பு தொகுத்திட்ட
தூணியோ வன்னவன் காகளமோ
தூரத்தினி லோடுந்தவத் தூயர்மனம் வாடச்செயுந்
துறுசிலம் பின்மேற் கணைக்காலே. (கஎ)

நம்மைப் புசிப்போர் நரரி லிழிந்தவர்
நாட்டி லெனச்சொல்வர் நல்லோர்கள்
நலமோடவர் தாமுந்நமை நன்காயுண வாவம்மென
ஞண்டு முழங்காலென் றுனதுவோ. (சுஅ)

இரதிகேள்வ னேறு மிரதத்தின் முன்னு
வினிதுறக் கட்டுங் கதலியென்கோ
இயலுடக சாலக்கம ரிருதூணென வோவிங்கெதை
யெண்ணிச் சொல்லுவன் குறங்கினுக்கே. (சுக)

கானகந் தன்னி லாமானின் குளம்பென்பர்
கடிதட மாங்குறி தன்னையதிற்
காமச்சுவை யாகாததை மேவக்கவை மீறுதலைக்
காட்டவொ ணாது கடுக்குமென. (சுo)

கல்லி னிடையாஞ் சுனையென் றிடுவரக்
கடிதடந் தன்னைக் கவிப்புலவோர்
கடுவேனிலி லல்லாததி லிடுவார்கர மெவருள்ளவர்
காதலித் திந்தக் கடலுலகில். (சுக)

பொற்கிரி யொன்றே பொறுக்கு மநந்தன்
பூவோ டிழைசாந்த மும்புனையும்
புளகங்கொளு மிளநீரென விளகுங்கிரி யுபயங்கொளப்
போற்றுவ ரேவுன் னிடைபோல. (சுஉ)

ஆல்வயி றென்ன வறைவ ரதின்மடிப்
பாலழ கெய்திட லின்றன்றி
யாற்றுப்புன லேற்குஞ்சுழி தோற்றுந்திற லாற்றுதலை
யாமென லென்றும் வழக்கன்றே. (சுங)

நீலமேல் வைத்தபாற் பொற்குடங் கொங்கை
நிகரென்னி லந்த வெழிற்குடமும்
நேரும்மிரு குணமுஞ்செயு நீர்மையினைச் சேராதது
நிகராவ தெங்ங னிகழ்த்துகவே. (சுச)

செங்க மலநிதி யங்கை யெனிலது
சேர்த்துக் கரமெடுத் துக்கொளற்காம்
சேரும்பெரி யோர்கொண்டிடச் செலவீந்திடு செய்கையது
சேரா தெனிலெவன் செப்புவதே. (சுரு)

வேளன்னர் மார்பிறு கப்பிணிக் குந்தோளை
வெய்யவ ராடல் புரிந்திடற்காம்
வேழம்மென லாகும்மென வேண்டிச்சொலு மேழைக்குடி
வீணரை யாரென வேயுரைப்பேன். (சசு)

சங்கென வேகந்த ரந்தனைச் சாற்றிடிற்
சாரும் பிளவிதிற் சாராவே
சதியோடிவ ணைழுமேழிசைச் சந்தம்பெறு மந்தம்மில
சாயலு மேவாதென் சாற்றுவதே. (சள)

ஞானேந் திரியங்க ளவகை யுங்கொளு
நாமியம் பும்முகத் திற்கிணையா
நவிலுங்கலை நாலுலொடு நண்ணும்மதி யெண்ணிச்சொல
நாமநீர் வைப்பினி லொப்புவமோ. (சஅ)

இருளிற் கரியதொன் றில்லை யதுகுழ
லேயென் றியம்புவ ரேழையரால்
இரவிக்குரு வழியன்னதை யேயும்மென லாமென்பதை
யெப்படி யொப்புவ ரேணினரே. (சக)

மாதர சேயுன் வடிவழ கையொரு
வாறு மதித்துரைத் தேனெனினும்
வளையாழொடு குழலும்முரு குரைசொற்றிட வலலேவரு
மாபுவி மீதில் வளமுறவே. (ரு0)

வண்டோ லிடுந்தா ரணிமணி யேயென
மருவிப் புடைவந்து காண்குவையே
வானுடரு மனநாடரு மகுடேசன தருளாலய
மன்னுங்கும் பாபிடே கச்சிறப்பே. (ருக)

கும்ப முனிகர கத்தினிற் றங்கிய
கோதறு காவிரி நன்னதியின்
குலமிக்கவ ரியல்பேயென நலமிக்கதொர் புனலாகிய
கொள்ளைப் பெருக்கது பார்மயிலே. (ருஉ)

கவேரன் மகளெனுங் காரணந் தோற்றிடக்
காவிரி யென்னக் கழறிவோர்
காவேமருங் கினிலாகிய கனகாரண நெறியாலதைக்
காவிரி யென்னயாங் கட்டுரைப்பேம். (ருக)

புளினத்தின் மேற்புளி னந்தழுவ வனம்
போற்ற விருந்திடும் பொற்புரைக்கும்
பூனைநல்லிழை மடமாதர்த நடுவில்லுறை யுனைநல்லெழில்
பொற்பு மிகுமிந்தப் பூதலத்தே. (நிச)

நீந்திப் பிறழ்ந்துநேர் சொல்ல வமையாம
னீரிற் றிரியுங் கய்யினங்க
ணேர்மையுற வெழில்கொண்டிட நின்கண்ணினை யுறநோக்குவை
நேடு மரிய நிதிக்குவையே. (நிந)

மலர்மேற் நிருவே மழலை குழறு
மடவன மேயென் மணிவிளக்கே
மாடப்புற வேயிங்குநன் மடுநீர்வயின் வயிறுகவே
மாணக் கிடக்கு மதுநோக்காய். (நிசு)

அந்தா மரைமே லழகாங் குவளை
யமைந்தா லஃதுன் நிருமுகமே
லலருந்திரு விழியேயென லாகும்மெழி லணைவுற்றதை
யாதர வோடிவண் காண்குவையே. (நிள)

அந்நா ளிமய மரிது தணந்த
வகத்திய னற்கர கங்கவிழ்ந்த
வழகாமிட மதுபாறையா யமையும்மினு மடுவாகிடு
மாசைக் கிடமே யதுகாணுய். (நிஅ)

காவிரி நற்கரை சேர விருந்திடுங்
கண்ணுத லாலய மாமதிலின்
கவினைப்பொறி யுருவையெழிற் கைவல்லவன் வினையையுறக்
காணுவை கண்ணிற் கருமணியே. (நிக)

சூழ்மதி லின்கீ ழிலங்கு மகமேரு
தோற்றிய தென்னத் துலங்கியிடுந்
துணைமென்பெடை யோடிங்கடை தூதுப்புற வினமேவிடுந்
துங்கமாங் கோபுரங் காணலமே. (சுo)

கோபுர மீதிற் குறித்தமண் பாவையின்
கோலக்கை யேறிடுங் கோகிலமுங்
குளிரின்னிசை செயுநற்கிளி கோலச்சிறை யறைபூவையுங்
குலவு மெழின்மயக் காழ்ந்ததிலுல். (சுக)

வாயிலின் மேலுறை பன்னிலை யாதார
வாயி லறுவகை யொக்குமதின்
வளமேவிய முடிரந்திர மாகும்பல கலசங்களு
மன்னுந் துவாதசாந் தத்தளவே. (சுஉ)

அதன்மேல் வெளியுற வம்பிகை பாக
ணகண்டா கார வெளியெனலாம்
ஆலும்மயி லேலுங்கிலை யாதாரமே லாகிப்பினர்
அங்கிரா தாரமே லாகியதே. (சுஏ)

பெண்ணர சேவண்மைப் பேட்டன மேதிகழ்
பெட்பாங் குடகறை யின்னழகைப்
பேணிச்சொல நாணும்முள மோதப்புவி மீதில்லெவர்
பேணி யியம்புவர் பேசுவையே. (சுசு)

வாருக்குத் தக்க வனமுலை மாதேயுள்
வாய்ந்தகோ லம்பிற நோக்கிடுவோம்
வனமானென மிளிர்கண்ணிணை வலயங்கொள விசயங்கொளும்
வண்ணப்பூஞ் சோலை வளர்குயிலே. (சுடு)

அணியணி நேய வருமருந் தேயிவ்
வணியொட்டுக் கான்மண் டபங்காணுய்
அகலம்பெற வேயிங்கிதை யாய்ந்தேவள வினிலாற்றிய
ஆசிரி யன்னெவ னற்புதமே. (சுசு)

மண்டபத் துள்ளாலோர் மண்டபங் காணுது
மகிதலத் தேநிக ரற்றதுவாம்
மாணையுற வதுகாணநீ வரவேணுமென் றுரையேயது
வண்ணம் பலவித மாம்வனப்பே. (சுள)

வான வருக்கு மரியளா யென்னக
மாகிய வண்ண வயற்கரும்பே
வளமேவிய மகுடாசல னினிதேயுறை முதல்வீடது
வாவது காண்குவம் வாய்ந்தினிதே. (சுஅ)

கோற்றேன் மொழியது பட்டி வரியிது
குமுத வரியது வாயிலடி
குலவும்மதி னலமாயதை வனையும்வனப் பதுபாரெனிக்
கொற்ற மிகுந்தவென் கோமளமே. (சுக)

சைவந் தழைத்திடப் பூதிநற் சாதனஞ்
சார வவதாரஞ் செய்தவராம்
சமயம்பெறு குரவரிரண் டிருவர்பவப் பிணிமாய்ப்பவர்
சாரு மழகினைப் பார்மணியே. (எo)

கைலை வளர்பரன் காதன் மிகக்கரை
காணுத வன்பு தலைக்கொண்டே
காயப்பணி முதலாலர னுறுநற்கழ லடிவைகுறக்
காணு மறுபத்து மூவரிவர். (எக)

கும்ப முனிகரகக் காவிரி கண்ட
கோதில் கரியுருக் கொற்றவனும்
கூடுந்திரு வாமைங்கர னீடுந்தளி யிதுவாகிடுங்
கூர்மை மிகுத்த குணக்குன்றே. (எஉ)

பூமி முழுதும் பொலிவெய் தவரும்
போகங்க ளியாவு மனுபவிக்கப்
புகலும்மெரு தேறிப்பவ னிகள்வந்திடு மாமெய்ப்பரன்
புண்ணியக் கோல மிதுவாகும். (எங)

அம்முனி பூசைமுன் னுற்றிய தாலிங்
ககத்தீச னென்பரா லார்குறியை
யாணிப்பொனே மாணிக்கமே யாளுந்திரு வேபொற்புடை
யன்னமே யன்னதை நோக்குவையே. (எச)

காக்கும் பெருந்திறற் கார்முகில் வண்ணனைக்
கணமுந் தணவாத குணமுடையாள்
கடிமாமலர் குடிமேவிய பிடிசேர்தளி வடிவாள்விழி
கண்டிடு வாய்மிடி விண்டிடவே. (எந)

வண்ண மயின்மீ தி லொள்ளிழை யாரவர்
வள்ளி யொடுதெய்வ யானைசேர
வாகாயமர் வளமாகிய வுருவம்மிது வந்திப்பைநீ
வனந்தனி லோடு மிளமானே. (எசு)

நண்ணிடும் பக்குவர் பக்குவ நோக்கிய
நாத னவரவர்க் கேற்பவநாள்
நாடிக்கொளு முருவம்பல வாகும்மிவை தேடிப்பணி
நண்ண வரிய விளம்பிடியே. (எஎ)

பஞ்ச கிருத்திய மாநடஞ் செய்திடும்
பரமன் றிருவுருக் கோலமிது
பாடித்தின மாடும்பத நேடித்தொழ வருள்செய்திடும்
பண்ணிய யாழி னினிமையளே. (எஅ)

இன்னு முள்ளபணி யெல்லாமுங் காணுவம்
என்னை யணைந்த விளங்குயிலே
யிமயப்புதல் வியின்வச்சிர மமையப்பணி பாராயதை
இருளுரு வான வெழிற்குழலே. (எக)

அன்னதன் றென்பா லடைவாம் பிராகாரத்
தாரு மடைப்பள்ளி யன்னதுகா
ணுரும்மிளப் பாறப்புரி யழகாமணி யார்மண்டப
மன்னது காணு யருமருந்தே. (அ0)

சேட சயனத் தறிதுயின் மேவிடுஞ்
சிருடை மாலின் பதியிதுகாண்
திரமாயவன் மார்பிற்குடி சேரும்பிடி தளியாமிது
சேர்விருந் தென்னலாஞ் செம்மையளே. (அக)

பிரம னுரைத்தபொய் தீர வருந்தவம்
பெட்புற வந்நா ளியற்றியிடப்
பேணும்மர னிருகான்மலர் பேணித்திரு வுருமன்னிய
பெரியதோர் வன்னி விருக்கமதே. (அஉ)

அந்நாட் சிராமன் றூதுவ னுய்ச்சென்
ருரு மிலங்கை யழித்தவனும்
அழகுற்றவ ளாமஞ்சனை யநிலற்குற வாயீன்றதொ
ராஞ்சனை யன்றளி யாமிதுவே. (அங)

பிரமன் றலையிழக் கத்தக்க வாறநாள்
பின்னற் சடைமுடிப் பிஞ்ஞகனர்
பிலமூடுரு வாகக்கொளு மொருதாணுவி லுதியற்புதன்
பேணும் பைரவ மூர்த்தியிதால். (அச)

வந்தவர் மெய்ப்பிணி வாட வருள்புரி
வள்ளல் சனியினற் கோயிலிதால்
வளமாநள னிவரைமுனம் வனமாய்வருந் திடநாடிய
வல்லமை மிக்கவன் வண்மையளே. (அஙு)

பாரத்து வாசதீர்த் தம்மது வின்னது
பண்பான தேவதீர்த் தமுமாகும்
பார்மீ தினி லிதையொப்பது வேறுன்றிலை பலமாய்ப்பது
பண்ணிசை மேவு மிளம்பார்ப்பே. (அசு)

எனக்குயி ராகிய வென்னுடை நாயக
விங்ங னெழிற்குசை கொண்டுறையும்
ஏணென்றிய பனவக்குழு வோரியாவ ரியம்பாய்மண
மேயு மவனுரு வேய்ந்தவனே. (அஎ)

கான மயிலே கனகமே யன்னவர்
காணுங் கண்டிபட்ட வேதாந்த
கனபண்டித ருறுசந்திர சேகரழ காம்பண்டிதர்
கற்ற சிவாசாரி யர்குழுவாம். (அஅ)

செந்தா மரையுறுஞ் சீர்மறை யோனெனச்
சேருமுந் நூல்செறி மார்பினராம்
சிகையோடரை சேர்கச்சம தெழில்கொண்டிட நிற்பாரெவர்
செம்மையான் மிக்க சிறப்பினனே. (அக)

இரும்பூ சுரரெனு மாசைவர் காணடி
யினிக்கு மெழிலுடை யின்றேனே
யிசைகாவிரி யாடிச்செயு நெறியின்முறை யிசைவாரிவ
ரெக்ய மியற்றிடு மேணினரே. (கo)

உலகமுண் டோனடி யோதியர்ச் சித்திடற்
சூரியவை ணவர்குலம் வந்தவராம்
உபயம்பெறு மடிகடம துயர்வாகிய லலாடங்கொளு
மூறிலர் கண்டா யுயரமுதே. (கக)

கண்டிகைப் பூணுங் கவினீறுஞ் சாத்தியே
கைகூப்பி நின்றிடு வாரிவர்கள்
கச்சிப்பதி மாகேசுரர் மெச்சும்புகழ் மிகமேவினர்
காலாண்டார் காணென் கருங்குயிலே. (கஉ)

மாதவர் நோன்மையு மாழ்கிடச் செய்திடு
மதரரி கூர்நெடுங் கண்மயிலே
மரபாற்பல ரிவரேனையர் மாண்பாய்மலி செல்வத்தினர்
வந்தார்கும் பாபிடே கங்காண. (கங)

உருத்திராக் கஞ்செறி கந்தரத் தோடவ்
வுயர்சிவ நாத னடியரென
உலகஞ்சொல வுயர்லிங்கமெ னுருவங்கொளு நலமேவினர்
ஒண்ணக ரத்தா ருயர்பாவாய். (கச)

இங்கிவர் காணடி யேந்திழை யேயிவ்
வினையி றிருப்பணி செய்தவர்கள்
ஏ்ணுக்கொரு நிலையாயுறை மாணிக்கமு மணிவாரிவர்
இசைபுகார் மேவு மிளங்கோக்கள். (கூ)

திரைகட லோடியுந் திரவியந் தேடெனச்
செப்பிய ஒளவைசொற் கைப்பிடித்தே
திறமாகிய வறநீணைறி பிறழாதிசை யுறவேயிவர்
செய்குவ ரொண்பொருள் சேயிழையே. (கசு)

செய்த பொருள்கொண்டு செய்யுஞ் சிறப்பினைச்
செப்புவ தெப்படி துப்பிதழே
திண்பாரதி லொண்பாமறை பண்பார்வட வண்மாமறை
செழித்திடச் செய்தது மீங்கிவரே. (கஎ)

அற்ரு ரழிபசி தீர்த்திட லேயிவர்
ஆக்கும்பொன் காக்குமொர் மார்க்கமென
அன்னம்பல துன்னுங்கறி மன்னுஞ்சுவை பின்னந்தர
அட்டிடுஞ் சத்திரங் கட்டிடுவார். (கசு)

சந்திர சேகரர் தந்திருப் பூசைக்குச்
சந்தத மும்மலர் தந்திடவே
சந்தம்பல கந்தம்பல கொந்தும்பல முந்தும்பல
தந்திடு வார்பல நந்தவனம். (கஙு)

தூய்மைசால் சேய்ஞலூர்த் தோன்றலு மேமுறத்
துன்று புனிற்றிளங் கன்றுபல
துள்ளப்பெரி துள்ளக்களி கொள்ளப்பொழி வள்ளற்பசு
சூழ்மடங் கட்டுவர் தாழ்குழலே. (கoo)

கோயிற் பணியிவர் கொள்ளக் கொதித்ததால்
கோச்செங்க ணனென்ப ரேச்சதுவால்
குற்றங்குறை யற்றிங்கிவர் சிற்றம்பல மற்றும்பல
கோயில் குயிற்றியோர் கோகிலமே. (கoக)

நிதான மாயிவர் மாதான தன்மங்கள்
நித்தமு நத்திய சித்தமுளார்
நித்தன்பத பத்தர்மன சுத்தர்பிர சித்தர்கன
நித்தில மொத்தவர் தத்தையனுய். (கஅ)

தேடரு மாமயிற் சேவக னும்மொரு
செட்டி யெனும்பெய ரொட்டிக்கொண்டான்
செழுமாநிதி பழுதில்லறம் வழுவில்சுக மழிவில்புகழ்
சேரிவர் போன்றிடக் கார்மயிலே. (கஆ)

நாட்டினின் மாதவ ரேட்டினிற் றீட்டிய
நல்லறம் நாட்டத்தில் நாட்டியதால்
நகரம்மென நிகரில்பெயர் புகலும்பதி மகிழும்மிவர்
நாட்டுக் கோட்டையர் நாடுவையே. (கஇ)

ஏந்திழை யேயிவ ரேந்திய கீர்த்தியை
யித்திற மென்றெடுத் தத்தனையும்
என்னென்மலர் நன்னென்முகன் பன்னுகமன் றன்னலுமே
யியம்பவொண் ணுதென் கயல்விழியே. (கஈ)

இப்பிறப் பன்றி யினிப்பிறவே மெந்தைக்
கேய்ந்த பணிசெய்த பான்மையினல்
என்பார்சிவ ணைச்சிக்கமு மன்பார்வுற வையாரிவர்க்
கிணைசொல்ல வல்லமே வென்றனமே. (கஉ)

அன்னவர் கைசொர்க்க மைந்து விரல்களு
மாகிடும் பஞ்ச தருக்களுமே
ஆகும்மணி யாழிக்குல மேவும்மணி சூளாமணி
யழகாஞ்சிந் தாமணி யேயெனலாம். (கஊ)

இங்நக ரத்தினர் மானிட ரல்ல
ரிலைமூன் றுடைச்சூல பாணியெணி
யிப்பூமியி லுறைநற்றளி யாவும்புதுக் கியவாக்கிய
வினையில் சிவகண மேயெனலாம். (கஎ)

தாதா கோடிக்கொரு பேரெனச் சாற்றினர்
தாரணி யாம்பெரி யோர்கள்முனுள்
தாவில்லவ ருரைதப்பிட லாகுந்திரு நகரத்தினர்
தம்பா லெனிலெவன் சாற்றுவதே. (கஏ)

மூளாரி யெழுமின் னெனத்திகழ் மொய்குழல்
மூண்டமேல் வெண்ணீற் றழகாகும்
முகமாமதி சிவநற்கலோ மொண்டுண்டிட லாகும்வண
மொய்க்கு மதனை முறைநோக்காய். (ககo)

திருவா ணவாவிடுந் தேனே யவர்மாதர்
தேடருஞ் செல்வ மிகப்படைத்துந்
திகழுஞ்செருக் கிலர்கூடினர் தெய்வப்பணி செயவெண் ணுநர்
சேர விருப்ப ருதுகாணுய். (ககக)

புண்ணிய மாதராய்த் தோற்றின ராயினும்
புருடார்த்த மேவத் தவம்புரிவார்
பூணின்மலி மார்பர்செறி நாணின்வழி தவறுதவர்
பூவியன் மேவினர் பார்மணியே. (ககஉ)

தம்மை யடைந்த தரித்திரர் நற்றனந்
தன்னெனத் தாமே செயவல்லார்
தாளின்முறை பொய்யாதவர் வேளாயினு நசையில்லவர்
தண்ணளி மிக்க தயையினரே. (ககங)

மங்கல நாண்முறை நீக்கிய மாதர்கள்
மலிபெண் ணுருவினை மாற்றினராய்
மண்மீதினி லொண்புண்ணிய முருவாகிமன் னியதென்னவே
மாணெடு நிற்கு மதுபாராய். (ககச)

தம்மை யணைந்த கணவராற் றுங்கொ
டனமெலா நற்சிவ தர்மமதிற்
றுமொப்பிய மனமோடுசெய் திடவெண் ணுநர் தகைமிக்கவர்
தாரணி யுய்ய வவதரித்தோர். (ககஞ)

ஆணழ காவென தன்புடை நாயக
ஆதர வொடுரு விங்ஙனிற்க
வன்பர்பல ரின்போடவ ணுகுஞ்செய லேதோதுவை
யாசைக் கிருப்பிட மானவனே. (ககசு)

அதுகாண்ன் மூர்த்திக ளாவா கனஞ்செய்
தமைத்ததோ ரியாக சாலையாகும்
அகனற்சூன யெனவேயொளி ரல்குற்பெறு மாதேயிஃ
தருங்கலை வல்லவர் தாமறிவார். (ககஎ)

மூர்த்தியா வாகன கும்பங்கண் முன்னுக
முன்னி யெடுத்து வருவார்காண்
முனிவோர்பலர் தேவர்கண முழுவன்பொடு வருவாரிவண்
முண்டக மாதெனு மொய்குழலே. (ககஅ)

சுற்றி வந்து பலதேவர்க் கபிடேகஞ்
சொல்லு முறைப்படி செய்தனர்பார்
சுகுணம்பெறு தோகாய்பழ விரதங்கனி பாகேயினிச்
சுற்றித் தண்ட மிடுவோம்யாம். (ககக)

வெள்ளை விடைமீதி லுள்ள முருகிட
வெளியினி லெம்பர மன்பவனி
வேடிக்கைகள் செயவந்தவி நோதம்மிது தொழவேதகும்
விண்ணவ ரெண்ணு மருமருந்தே. (கஉ0)

அலையா துலகத்தை யாளுந் திறமுடை
யம்மலை யம்மையின் கோயிலிதால்
அமலைகறுப் பணனேவலை யாற்றப்பெரு மிதமோடமர்
ஆற்றலைப் பாரா யகமகிழ்ந்தே. (கஉக)

எத்தல மும்மிது போலழ கெய்திற்
றிலவிதில் வாழுவ மேந்திழையே
எழிலார்மகு டேசன்வடி வாளோடரு ளீவானிவன்
என்றுங் கலங்கா தினிதாக. (கஉஉ)

ஆவாழி யந்தணர் வானவர் வாழ்கநம்
அரசர் குலம்வாழி யந்தரத்தி
லாகும்மெழின் மேகங்களு மகிலந்தழைத் தினிதாகவே
அறல்பொழிந் தேயென்றும் வாழியவே. (கஉங)

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொடுமுடி மஹா கும்பாபிஷேக

நாட்பாட்டு.

இராட்டையாசிரியவிருத்தம்.

உலகுபுகழ் நகரத்த ரெனுமொரு சிறப்பினுட
லேங்கிவளர் வணிக மாந்தர்
உயர்வேந்த ரொப்பத் தமாதுநிதி பதிபுண்ய
மொன்றினுக் குபயோகமா
உய்த்துச் சிவாலயத் தொண்டாற்று சிவநேச
வுத்துங்க ராமி வர்க்கே
உம்பருளு மிம்பருளு மிந்நாளி லிணைகண்டி
லோமென்ப துண்மை யின்னோர்

அலகிலருண் மகுடேசர் திருநாதர் பிரமாவு
மாமூவர் வீற்றி ருக்கும்
அழகுமிகு கொடுமுடியி லாலயம் பழுதகல
வருமைபெற வேபுதுக்கி
அம்புவியு ளோர்கண்டு போற்றிடச் சவுமிய
லாண்டின்முதன் மேட மதியில்
அமைதெய்தி நான்கினிற் சுக்ரவா ரத்தினல
மார்சதய நாட்ப லொன்றாய்

இலகுதிதி யிற்குலவு மிடபலக் கினமதனி
லினியகும் பாபி டேகம்
இன்புற நடாத்துவித் தாதிசிவ வந்தணரு
மிவர்பின்வரு வருணத்தரும்
எல்லோரு மிதயாம் புயத்திற் களிப்பெய்தி
யிணையிலுல் லாச ராகி
எம்பிரான் றிருவருட் பிரசாத நுகர்தர
வியற்றின ரிலோர்கை வண்மை

நிலவுபுயல் சற்பதரு தேதனுநிதி மணிவண்ணைம்
நிகரா வழுத்த லாகும்
நிச்சய மிதிற்சிறி தும்வழுவில்லை யினையர்செய்
நித்யபதி புண்யங்களும்
நிகரிலா வன்னதா னங்களுஞ் சத்திரமு
நிலுமிவர் மனைவாழ்க்கையும்
நிதியும்வா ணிபமுமிவர் சந்ததியு நிலமீது
நீடுழி வாழி மாதோ.